25

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருடம் பொதுக்கலைமாணித் தேர்வு 2010 /2011 (வெளிவாரி)

(மார்ச் /ஏப்ரல் 2016)

27 APR 2016
SRI LANKA

## TL 202 குறிப்பிட்ட பாடநூல்கள்

## Prescribed Texts

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

என்திறத்து அவலம் கொள்ளல் இனியே
வல்ஆர் கண்ணி இளையர் திளைப்ப
'நகாஅல்' என வந்தமாறே <u>எழாநெல்</u>
<u>பைங்கழை பொதி களைந்தன்ன விளர்ப்பின்</u>
<u>வளைஇல் வறுங்கை ஓச்சி</u>
<u>கிளையுள் ஒய்வலோ</u> கூறுநின் உரையே

அ) இப்பாடலின் பொருளை எளிய நடையில் எழுதுக. (15 புள்ளிகள்)

ஆ) இப்பாடலின் திணை, துறைகள் யாவை? (05 புள்ளிகள்)

இ) அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பை விளக்குக. (05 புள்ளிகள்)

02. புறநானூற்றில் போர்களினால் ஏற்பட்ட அவலம் வெளிப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (25 புள்ளிகள்)

03. கண்ணகி வழக்குரையில் ஆயர்குல மக்களின் வாழ்க்கைமுறை விபரிக்கப்படுமாற்றை எடுத்துக் கூறுக. (25 புள்ளிகள்)

04. திருவாசகத்தில் சிவன்மீது கொண்டுள்ள பக்தியை மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் முறையை ஆராய்க. (25 புள்ளிகள்)

05. "காளமேகப் புலவரின் தனிப்பாடல்களிலே அங்கதம், வசை ஆகிய இரு பண்புகளும் தலையாய பண்புகளாக அமைந்துள்ளன" இக் கூற்றை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

06. "மஹாகவியின் 'ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்' நவீன காவியத்திற்குரிய பல்வேறு பண்புகளையும் கொண்டுள்ளது." இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (25 புள்ளிகள்)

**அல்லது**

செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் சமூக அங்கதம் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(25 புள்ளிகள்)

26

07. ‘பிச்சமூர்த்தியின் புதுக்கவிதைகள் கருத்தாழமும் உணர்ச்சி வெளிப்பாடும் மிக்கவை’ – கவிதைகளின் துணையுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

08. தேம்பாவணி ‘பிரிந்த மகவைக்காண் படலத்திலே’ சூசை, மரியாள் ஆகியோர் குழந்தை யேசு மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு சித்திரிக்கப்படுமாற்றை எடுத்துக் காட்டுக. (25 புள்ளிகள்)

**************************************************************************